**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 04 ஆம் நாள் வியாழக்கிழமை

**E.A.No.09/2026 and E.A.No.10/2026**

**in**

**E.P.No.03/2016**

**in**

**O.S.No.477/2013**

1. கரிவலம்வந்தநல்லூர் பிள்ளைமார்கள்
பொது மகமை சங்கம் (பதிவு எண்.3/2013)
அதன் தலைவர் பெ.சுப்பையா பிள்ளை (இறந்தவர்)

... 1 ம் மனுதாரர்/1 ம் வாதி

2. கரிவலம்வந்தநல்லூர் பிள்ளைமார்கள்
பொது மகமை சங்கம் (பதிவு எண்.3/2013)
அதன் செயலர் பா.முருகன் அவர்கள் மூலம்

... 2 ம் மனுதாரர்/2 ம் வாதி

3. கரிவலம்வந்தநல்லூர் பிள்ளைமார்கள்
பொது மகமை சங்கம் (பதிவு எண்.3/2013)
அதன் தலைவர் கோபால் பிள்ளை

... 3 ம் மனுதாரர்/சங்க
தற்போதைய தலைவர்

**/எதிர்/**

1. கணபதியாபிள்ளை (இறந்தவர்) ... 1 ம் எதிர்மனுதாரர்/
1 ம் பிரதிவாதி

2. சுப்புலட்சுமி
3. பாலசுப்பிரணியன்
4. ரவிச்சந்திரன்
5. கணேசன்
6. சீதாலட்சுமி
7. மாதவன் (மூளை வளர்ச்சியற்றவர்)

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:36:56 +0530

(மேற்படி மூளை வளர்ச்சியற்ற 7ம் எதிர்மனுதாரருக்கு
நீதிமன்ற காப்பாளர் திரு.R.காளிராஜ்,
கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் மூலம்)

... 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/
இறந்துபோன 1ம் எதிர்மனுதாரின்
வாரிசுகள்

இம்மனுக்களானது 18.04.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 2 முதல் 4 மற்றும் 6வது எதிர்மனுதாரர்கள் நிறைவேற்றுதல் மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற காப்பாளராக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.காளிராஜ் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு, 5ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் மற்றும் 5ம் எதிர்மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>பொதுவான உத்தரவு</u>

மனுதாரர்களால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 மற்றும் கட்டளை 7 விதி 14(3) ஆகியவற்றின் கீழ், E.P.No.3/2016 மனுவில், மனுதாரர்கள் தரப்பில் ரிட் மனு எண்.29631/2025ன் உத்தரவு நகல் மற்றும், தென்காசி சங்கங்களின் மாவட்ட பதிவாளர் அவர்கள் 06.04.2026 தேதியில் வழங்கியுள்ள படிவம்–7 சான்று நகல் ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்து கொள்ள, E.P.No.3/2016 மனுவை மறுதிறவு செய்யக்கோரியும், இம்மனுவுடன் தாக்கல்

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:37:02 +0530

செய்துள்ள ஆதரவுகளை மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள உத்தரவிட வேண்டியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட E.A.No.09/2026 மற்றும் E.A.No.10/2026-ன் மனுக்களின் சுருக்கம்:-**

இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை நிறைவேற்றி வாடகைதாரரான 1ம் எதிர்மனுதாரரை மனு சொத்திலிருந்து காலி செய்ய E.P.No.3/2016 நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது, 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு வாரிசுகள் சேர்த்து E.P.No.3/2016 மனுவை நடத்தி வருவதில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் E.P.No.3/2016 மனு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் கரிவலம்வந்தநல்லூர் பால்வன்னநாதசுவாமி திருக்கோவில் வகையறா மீது கந்தசஷ்டி திருவிழா சம்பந்தமா ரிட் மனு எண்.29631/2025 மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளதாகவும், அதோடு மனுதாரர்களின் சங்கம் நிறைவேற்றிய தீர்மானத்தை தென்காசி மாவட்ட சங்கங்களின் பதிவாளர் அவர்களிடம் படிவம்-7 மூலம் கோர்வைக்கு சமர்பித்திருந்ததை, மேற்படி மாவட்ட சங்கங்களின் பதிவாளர் அவர்களும் 06.04.2026 தேதியில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றும், மேற்படி ரிட் மனுவின் உத்தரவையும், படிவம்-7 சான்று நகல் ஆவணங்களையும் மனுதாரர்கள் தரப்பில் E.P.No.3/2016 மனுவின் விசாரணையில் தாக்கல் செய்து மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், ஆகையால், மனுதாரர்கள் தரப்பில் ரிட் மனு எண்.29631/2025 ன் உத்தரவு நகல் மற்றும், தென்காசி சங்கங்களின் மாவட்ட பதிவாளர் அவர்கள் 06.04.2026 தேதியில் வழங்கியுள்ள படிவம்-7 சான்று நகல் ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்து கொள்ள, E.P.No.3/2016 மனுவை மறுதிறவு செய்யக்கோரியும், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆதரவுகளை மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள உத்தரவிட வேண்டியும் இம்மனுக்கள் மனுதாரர்கள் தரப்பில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:37:09 +0530

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>5ம் எதிர்மனுதாரர் தரப்பில் E.A.No.09/2026 ல் தாக்கல் செய்யப்பட்டு E.A.No.10/2026 ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

மனுதாரர்களின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், ஏதோ மனுதாரர்கள் தன் மனுவில் கரிவலம் பால்வண்ணநாதசுவாமி திருக்கோவில் வகையறா மீது கந்தசஷ்டி திருவிழா சம்பந்தமாக ரிட் மனு தாக்கல் செய்து அதில் உத்தரவு பெற்றுள்ளதாக கூறியிருப்பது இவ்வழக்கிற்கும் மனுவிற்கும் சம்பந்தமில்லாத உரிமையற்ற ஆவணமாகும் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு இவ்வழக்கிற்கும், நிறைவேறுதல் மனுவிற்கும் சம்பந்தமில்லாத ஆவணமாகும் என்றும், இந்த ஆவணத்தின் மூலம் நிறைவேறுதல் மனுவை தீர்மானிக்க முடியாத ஒன்றாகும் என்றும், எனவே E.P.No.3/2016 மனுவில் விசாரணைக்கு தாக்கல் செய்து குறியீடு செய்து கொள்ள வேண்டி மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், எனவே காலதாமதத்தை மன்னித்து ரிசர்வ் செய்து கொள்ள வேண்டி மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், இந்த மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவிற்கும் இந்த நிறைவேறுதல் மனுவிற்கும் சம்பந்தம் இல்லாத ஒன்றாகும் என்றும், எனவே, இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் E.A.No.10/2026 மனுவுடன் தாக்கல்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:37:15 +0530

செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் காலதாமதமாக தற்பொழுது E.P.No.03/2016 மனுவானது 5ம் எதிர்மனுதாரர் தரப்பு வாத உரைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

6) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் கரிவலம்வந்தநல்லூர் பால்வன்னநாதசுவாமி திருக்கோவில் வகையறா மீது கந்தசஷ்டி திருவிழா சம்பந்தமா ரிட் மனு எண்.29631/2025 மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளதாகவும், அதோடு மனுதாரர்களின் சங்கம் நிறைவேற்றிய தீர்மானத்தை தென்காசி மாவட்ட சங்கங்களின் பதிவாளர் அவர்களிடம் படிவம்-7 மூலம் கோர்வைக்கு சமர்பித்திருந்ததை, மேற்படி மாவட்ட சங்கங்களின் பதிவாளர் அவர்களும் 06.04.2026 தேதியில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றும், மேற்படி ரிட் மனுவின் உத்தரவையும், படிவம்-7 சான்று நகல் ஆவணங்களையும் மனுதாரர்கள் தரப்பில் E.P.No.3/2016 மனுவின் விசாரணையில் தாக்கல் செய்து மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

7) மேலும், இம்மனுக்களின் 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள் தன் மனுவில் கரிவலம் பால்வண்ணநாதசுவாமி திருக்கோவில் வகையறா மீது கந்தசஷ்டி திருவிழா சம்பந்தமாக ரிட் மனு தாக்கல் செய்து அதில் உத்தரவு பெற்றுள்ளதாக கூறியிருப்பது இவ்வழக்கிற்கும் மனுவிற்கும் சம்பந்தமில்லாத உரிமையற்ற ஆவணமாகும் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு இவ்வழக்கிற்கும், நிறைவேறுதல் மனுவிற்கும் சம்பந்தமில்லாத ஆவணமாகும் என்றும், இந்த ஆவணத்தின் மூலம் நிறைவேறுதல் மனுவை தீர்மானிக்க முடியாத ஒன்றாகும் என்றும், எனவே

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:37:22 +0530

E.P.No.3/2016 மனுவில் விசாரணைக்கு தாக்கல் செய்து குறியீடு செய்து கொள்ள வேண்டி மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும் இம்மனுக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) மனுதாரர்களால் E.A.No.10/2026 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபணைகள், ஆவணங்கள் குறியீடு செய்யப்படும் சமயத்திலோ அல்லது உத்தரவு பகரப்படும்போது இந்நீதிமன்றத்தால் பரிசீலிக்கக்கூடியதாகும். தற்போது, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விட கஷ்ட, நஷ்டமும் ஏற்படப்போவதில்லை.

9) இருப்பினும், மனுதாரர்களால் இம்மனுக்களானது காலதாமதமாக E.P.No.03/2016 மனு 5ம் எதிர்மனுதாரர் தரப்பு வாத உரைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் 5ம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில்கொண்டு நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

<u>10) இறுதியாக</u>

<u>E.A.No.09/2026</u>

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 5ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 08.06.2026ம் தேதிக்குள்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.04 18:37:30 +0530

செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 08.06.2026.

**E.A.No.10/2026**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு (Subject to Proof and Relevancy) ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 5ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 08.06.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 08.06.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஜீன் மாதம் 04ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:37:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :- - இல்லை -

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:37:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.09/2026 and
E.A.No.10/2026
in
E.P.No.03/2016
in
O.S.No.477/2013
உத்தரவு (Draft / Fair)
நாள் : 04.06.2026